**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 37/2022**

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07–ம் நாள் வெள்ளிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 07.11.2025 | | |
| பெயர்: | ராமச்சந்திரன் (PW– 1 Cross con ) | 1தகப்பனார் பெயர்: | சின்னபிள்ளை |
| கிராமம்: | கொண்டல் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 55/2025 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி: 07.11.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்– 15.47)**

1. வா.சா.ஆ.1 ஐ போல் பிரதிவாதி எத்தனை கடனுறுதி சீட்டு எனக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் இந்த ஒன்று மட்டுமே, வேறு எதுவுமில்லை. வா.சா.ஆ.2 அறிவிப்பை பிரதிவாதி நேரடியாக பெற்றுக் கொள்ளவில்லை என்றால் முதலில் பாக்கியலெட்சுமி வாங்கினார் என்றால் சரிதான், வா.சா.ஆ.3 ல் உள்ள கையெழுத்து பாக்கியலெட்சுமியுடையது தான். ஆனால் பிறகு வேறு அறிவிப்பு பிரதிவாதிக்கு அனுப்பப்பட்டு அவர் அதை பெற்றுக்கொண்டார்.

2. அவ்வாறு பிரதிவாதி பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் Postal tracking report தாக்கல் செய்துள்ளேன். இரண்டாவதாக அனுப்பப்பட்ட அறிவிப்பு பிரதிவாதியால் பெறப்படவில்லை என்ற காரணத்தால்தான் நான் அஞ்சலக ஒப்புதல் அட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பணம் கடன் கொடுப்பதற்கான உரிமம் பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

3. நான் உண்மையிலேயே உரிமம் வைத்திருந்தால் இந்த வழக்கில் தாக்கல் செய்திருப்பேன், அவ்வாறு இல்லாததால்தான் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வரும் விபரத்தை எனது முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டை நிரப்பியது எனது மகள் அமலா.

4. கடனுறுதி சீட்டை நிரப்பிய மையும், கீழே ஸ்டாம்ப்பில் உள்ள கையெழுத்து மையும் ஒரே மை தான் என்றால் சரிதான். பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வக்காலத்தில் உள்ள பிரதிவாதி கையெழுத்தும், வா.சா.ஆ.1 ல் உள்ள பிரதிவாதியின் கையெழுத்தும் மாறுபட்டுள்ளது என்றால் இல்லை, அவர் வேண்டுமென்றே மாறுபட்டு கையெழுத்து செய்துள்ளார். வா.சா.ஆ.1 ஐ நிரப்பியவரே அதில் பிரதிவாதி கையெழுத்தும் செய்தார் என்றும், அதனால்தான் வக்காலத்தில் உள்ள கையெழுத்து மாறுபடுகிறது என்றும் சொன்னால் சரியல்ல.

5. நான் எனது வா.சா.ஆ.4 ஆன அறிவிப்பில் பிரதிவாதி 05.05.2018ம் தேதி வாரத்தவணையாக பணம் பெற்றுக் கொண்டு சரிவர கடனை பைசல் செய்துவிட்டார் என குறிப்பிட்டுள்ளேன், அப்போதுதான் இந்த வா.சா.ஆ.1 என்னிடம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் திருப்பி செலுத்தப்பட்ட கடனை கேட்பது என்பது சட்டப்படியானது அல்ல என்றால் சரியல்ல. நான் உண்மையிலேயே பிரதிவாதிக்கு கடன் கொடுக்காததால்தான் அது சம்மந்தப்பட்ட பதிவேடுகளை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. எனக்கும் பிரதிவாதிக்கும் எவ்வித சண்டை சச்சரவும் இல்லை. ரூ. 20,000/−க்கு மேல் கடன் கொடுக்கும்போது நேரடியாக ரொக்கமாக கொடுக்காமல் வங்கிப்பரிவர்த்தனை மூலமாக தான் கொடுக்க வேண்டும்

என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ற்கு தகுந்தாற்போல் எனது இருப்பிட முகவரி மாற்றப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு ரூ. 3,00,000/– க்கு மேல் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் உள்ளது என்று எனது முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் அதை நிரூபிக்கும் வகையில் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7. நான் சட்டத்திற்கு புறம்பாக வட்டித்தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியிடம் கந்துவட்டி கேட்டு கொடுக்காத காரணத்தால் வா.சா.ஆ.1 ஐ பூர்த்தி செய்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மீதுதான் கந்துவட்டி தடைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி பெண் என்பதாலும், ஆதரவற்றவர் என்பதாலும் வா.சா.ஆ.1 ஐ பூர்த்தி செய்து அவரிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. வா.சா.ஆ.1 ல் உள்ள பிரதிவாதியின் கையெழுத்திற்கும், வக்காலத்தில் உள்ள கையெழுத்திற்கும் மாறுபாடு உள்ளதால் நான் வா.சா.ஆ.1 ல் கூறியுள்ள கடனை நிரூபிக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் நான் பிராதில் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், பிராது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 16.13)**